
## வள்ளலார் சர்வதேச மையம் திட்டமிட்டபடி அமைக்கப்படுவதால்

# ஜோதி தரிசனத்திற்கு எவ்விதமான இடையூறும் இருக்காது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, பிப். 26 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (24.02.2024) ஆணையர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறைக்கு தேர்வு செய்ய ப்பட்ட செயல் அலுவலர் (நிலை - 3) பணியிடத்திற்கு 10 நபர்களுக்கும், செயல் அலுவலர் (நிலை - 4) பணியிடத்திற்கு 65 நபர்களுக்கும் ஆகமொத்தம் 75 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தார்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திராவிட முன்னேற்ற கழக அரசு பொறுப்பேற்ற நாள்முதல் அனைத்து துறைகளிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற விதமாக மக்கள் நலன் சார்ந்த அனைத்து பணிகளையும் விரைந்து செயல்படுத்திடும் வகையில் காலி பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பட்டு வருகின்றன. இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செயல் அலுவலர் (நிலை 1), செயல் அலுவலர் (நிலை-3), செயல் அலுவலர் (நிலை4), இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் என மொத்தம் 379 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. கருணை அடிப்படையில் திருக்கோ யில்களில் 106 நபர்களுக்கும், துறையின் 24 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 110 விதியின் கீழ் 5ஆண்டுகள் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 1,289 பணி யாளர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளனர். பதவி உயர்வு தொடர்பாக நீதிமன்றங் களில் நிலுவையில் இருந்த வழக்குகளில் சமரசம் ஏற்படுத்தப்பட்டு 713 அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இதுவரை 1,446 குடமுழுக்குகள் நடத்தப்பட்டு இருப்பதோடு, ஆக்கிரமிப்பிலிருந்த ரூ.5722.21 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு பணி நியமன ஆணை பெற்றிருக்கின்ற 75 செயல் அலுவலர்களும் திருக்கோயில்களின் வளர்ச்சிக்காக வும், பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கும், இறை சொத்துக்களை காத்து திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டும் வகையிலும் அர்ப்பணிப்பு உணர்வோடு விரைந்து செயலாற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில்களின் வருமானத்தில் 40 சதவீதத்திற்கு உட்பட்டு பணியாளர் நியமனங்களுக்கான செலவினம் இருக்க வேண்டும் என்ற சட்ட விதிகளின்படி, திருக்கோயில்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு விளம்பரப்படுத்தி குழுவின் மூலம் நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வு செய்யப்படுகின்றனர்.

இந்து சமய அறநிலையத் துறை உருவாக்கப்பட்ட 1959 ஆம் ஆண்டிலிருந்து இவ்வளவு நிறைவான பணிகள் திராவிட மாடல் ஆட்சியில்தான் நடைபெற்றுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்று 34 மாதங்களில் செய்திருக்கின்ற சாதனைகளை கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியோடு ஒப்பிடுகையில் அனைத்து வகையிலும் அவர்களின் பணிகளை மிஞ்சுகின்ற அளவிற்கு சாதனையாக அமைந்துள்ளது. ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் 12,947 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட வைப்பு நிதி ஒரு லட்சத்தை ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கியதோடு, 2022 - 2023 ஆம் நிதியாண்டில் 2,000 திருக்கோயில்களும், 2023-2024 ஆம் நிதியாண்டில் 2,000 திருக்கோயில்களும் ஒரு கால பூஜை திட்டத்தில் சேர்த்திட அரசு மானியமாக ரூ.70 கோடியும், பொதுநல நிதியிலிருந்து ரூ.10 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு கால பூஜை திட்டத்தில் 17,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக முதலமைச்சர் அவர்கள் ரூ.200 கோடி அரசு மானியம் வழங்கியுள்ளார். மேலும், ஒரு கால பூஜை திட்டத் திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகையாக ரூ.1,000/ முதன்முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சி காலத்தில் கிராமப்புற திருக்கோயில்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திருக்கோயல்களின் எண்ணிக்கையை தலா 1,000 லிருந்து 1,250 ஆக உயர்த்தப்பட்டுள்ளதோடு, அத்திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.1 லட்சத்தை ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கிய பெருமை தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களை சாரும். 2021 2022 மற்றும் 2022 - 2023 ஆம் நிதியாண்டுகளில் 2,500 கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் 2,500 ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023 2024 ஆம் நிதியாண்டிற்கு கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் திருக்கோயிலகள் தேர்வு செய்யப்பட்டு விரைவில் நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

1,000 ஆண்டுகள் முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களாக 714 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டுள்ளன. அத்திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணிகள் மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் 2022 - 2023 மற்றும் 2023-2024 ஆம் நிதியாண்டுகளில் தலா ரூ.100 கோடி அரசு மானியம் வழங்கினார்கள். அரசு மானியம் மற்றும் உபயதாரர் நிதி ரூ.106 கோடி ஆக மொத்தம் ரூ.306 கோடியில் 197 தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் 27 திருக்கோயில்களின் குடமுழுக்கு நிறைவுப் பெற்றுள்ளது. மேலும், இந்நிதியாண்டிற்கு ரூ.100 கோடி அரசு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கோயிலுக்கு கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட ரோப் கார் அமைக்கும் பணியினை கடந்த ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் விரைவுபடுத்தாமல் 2021 சட்டமன்றத் தேர்தலை மனதில் வைத்து, முழுமையாக முடிவு பெறாத ரோப் கார் பணியை கடந்த ஆட்சியில் திறந்து வைத்தனர். இந்து சமய அறநிலையத் துறை திட்டங்கள் குறித்த கலந்தாய்வின் போது சோளிங்கர் ரோப் கார் பணி முடிவடையாத நிலையை கண்டறிந்து, அம்மாவட்ட அமைச்சர் திரு. காந்தி அவர்கள் உபயதாரர்களின் பங்களிப்புடன் ரூ.12 கோடி மதிப்பீட்டில் பக்தர்களுக்கு தேவையான காத்திருப்புக் கூடம், இருக்கைகள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள், வாகனங்கள் நிறுத்துமிடம் போன்றவற்றை அமைத்து தந்து நேற்றைய தினம் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. விரைவில் பக்தர்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்படும் என திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து துறையின் சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நானும், அம்மாவட்ட அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர் செல்வம் அவர்களும் நேரில் சென்று பார்வையிட்டோம். வள்ளலார் சர்வதேச மையத்தை வடிவமைப்பதற்கு சர்வதேச அளவில் கோரப்பட்ட ஒப்பந்தத்தில் பங்கேற்ற ஏழு நிறுவனங்களில் தகுதியான ஒரு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு வடிவமைப்பு பணிகள் தொடங்கப்பட்டன. அதன்பின் கடலூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்களின் கருத்துக் கேட்பு கூட்டமும், வடலூரில் அம்மாவட்ட அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் கருத்துக் கேட்பு கூட்டமும் நடைபெற்றது. பின்னர், ரூ.100 கோடி மதிப்பீட்டில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

வள்ளலார் அவர்கள் நம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்ற பிறகு சுமார் 150 ஆண்டு காலமாக வள்ளலாரை பற்றிய எவ்வித நினைவு கூறலும் நடத்தப்படவில்லை. முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 2022 அக்டோபர் 5 ஆம் நாள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழாவில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலரை வெளியிட்டு, ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் வள்ளலாரின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில் 52 வாரங்கள் விழாக்களும், மாணவ, மாணவியருக்கான இலக்கிய போட்டிகளும் நடத்தப்பட்டன. மேலும், வள்ளலார் முப்பெரும் விழா மற்றும் தொடர் அன்னதானத் திட்டத்திற்காக அரசு மானியமாக ரூ.3.25 கோடி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கடந்த 2023 அக்டோபர் 5 ஆம் தேதி கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற “வள்ளலார் - 200” ஒராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், முதலமைச்சர் அவர்கள் வடலூரில் ரூ. 99.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட வுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வழங்கினார். தற்போது ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளது. வள்ளலார் சர்வதேச மையம் தற்போது வடிவமைக்கப்பட்டுள்ளவாறு அமைக்கப்படும் போது ஜோதி தரிசனத்திற்கு இடையூறு ஏற்படும் என ஒருசில அரசியல் கட்சி தலைவர்கள் குற்றச்சாட்டாக எடுத்து வைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்கின்ற போது தான் வள்ளலாருக்கு சிறப்பு சேர்க்கப்படுகிறது. வள்ளலார் பெயரில் நகர் அமைத்தும், வள்ளலார் பெயரில் பேருந்து நிலையம் அமைத்தும் சிறப்பு செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். வள்ளலாரின் பிறந்தநாளை தனிப்பெருங்கருணை நாளாக அறிவித்து, முப்பெரும் விழா நடத்தி, வள்ளலார் சர்வதேச மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டது முதலமைச்சர் தளபதி அவர்கள்.

வேறு எந்த ஆட்சி காலத்தில் வள்ளலார் அவர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டது என்பதனை இன்று குற்றச்சாட்டு கூறுபவர்கள் எடுத்துக் கூற வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்படுவதால் நிச்சயமாக ஜோதி தரிசனம் காண்பவர்களுக்கு எவ்விதமான இடையூறும் இருக்காது. ஏற்கனவே ஜோதி தரிசனம் காணுபவர்களைவிட தற்போது அமைக்கப்படுகின்ற கட்டமைப்பின்படி அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் நின்று ஜோதி தரிசனம் காணலாம். மேலும், இம்மையத்தில் தியான மண்டபம், வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் அருங்காட்சியகம், பாடசாலைகள், வைத்திய சாலை, யோகசாலை, கலையரங்கம், நிர்வாக அலுவலகம், டிஜிட்டல் நூலகம், முதியோர் இல்லம், பக்தர்களுக்கான தங்குமிடங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் குளியலறை வசதிகள், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் அமைக்கப்படுகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வள்ளலார் சர்வதேச மையத்திற்கு காணொலி மூலம் அடிக்கல் நாட்டியபோது வடலூரில் அம்மாவட்ட அமைச்சர் அவர்களுடன் ஆயிரக்கணக்கான மக்கள், சன்மார்க்க அன்பர்கள் பங்கேற்றார்கள். அதேபோல சென்னையில் வள்ளலார் தலைமை சங்க நிர்வாகிகள் மற்றும் சன்மார்க்க அன்பர்கள் முதலமைச்சர் அவர்களை சந்தித்து சர்வதேச மையத்திற்கு அடிக்கல் நாட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். ஆகவே சர்வதேச மையத்திற்கான எதிர்ப்பு என்பது வள்ளலாரின் பெருமைகளை உயர்த்தி பிடித்தவர் என்ற வரலாறு முதலமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகதான். வள்ளலார் சர்வதேச மையத்தின் காட்சி வடிவமைப்பு விரைவில் அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். அதனை பார்த்தபின் இப்படி ஒரு சிறப்பு வாய்ந்த நிகழ்வு நடைபெற இருப்பதை ஏன் எதிர்க்கிறீர்கள் என்ற கேள்வியை அவர்களிடமே நீங்கள் கேட்கின்ற ஒரு நல்ல சூழல் உருவாகும். வள்ளலாரின் கொள்கைகள், கோட்பாடுகள், லட்சியங்களை தூக்கிப் பிடிக்கின்ற வாழும் வள்ளலார் எங்கள் முதலமைச்சர் என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (24.2.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடைபெற்ற UmagineTN தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் நிறைவு விழாவில் மதுரை, திருச்சியில் மண்டலப் புத்தாக்க மையங்கள் உருவாக்குதல் மற்றும் 26 பொறியியல் கல்லூரிகளுடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மேற்கு ஆஸ்திரேலிய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் ஆம்பர் ஜேட் ஆண்டர்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், இந்தியத் தொழில்நுட்ப கழகத்தின் இயக்குநர் காமகோடி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

